# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,099 — 1960 අප්‍රේල් 1 වැනි සිකුරාදා — 1.4.1960

12,099 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III—காணிகள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள்— | |
| முன்னறிவித்தல்கள் .. .. | — |
| இறுதிக் கட்டளைகள் .. .. .. | — |
| அரசாங்க அதிபர்களினுற் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கிழக்கு மாகாணம் .. .. .. | — |
| வடமேற்கு மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சப்ரகமுவா மாகாணம் .. .. | — |
| நிர்ணய உத்தியோகத்தர்களின் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கிழக்கு மாகாணம் .. .. .. | — |
| வடமேற்கு மாகாணம் .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சப்ரகமுவா மாகாணம் .. .. | — |
| காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள் .. | 185 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் .. | — |
| காணி மீட்டல்பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித காணி அறிவித்தல்கள் .. .. | 186 |
| சிறு நிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் .. | — |


## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய காணி அமைச்சர் விஜயானந்த தகநாயக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு தை மீ 18 ந் உ.

டபிள்யு. தகநாயக்க,
விவசாய, காணி அமைச்சர்.

மட்டக்களப்பு டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : LD 3871.
விவசாய, காணி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 58/59 E 172.

காணியின் விபரம்

மட்டக்களப்பு மாவட்டம், ஏருவூர் பற்று, ஏருவூர் 3 ம் குறிச்சி கிராமத்திலிருக்கும், சுமார் ஏ, 0, று. 2, பே. 16 விசாலங்கொண்ட ஒரு துண்டுக் காணி. எல்லைகளாவன:

வடக்கு : ஒழுங்கை ;
கிழக்கு : ஏருவூர்—புன்னைக்குடாப் பாதை ;
தெற்கு : ஏருவூர் பொலிஸ் நிலைய வளவு ;
மேற்கு : ஏருவூர் அரசினர் சிரேட்ட பாடசாலை வளவு.

---

இல : LD/C/27.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :——

கண்டி மாவட்டம், உடுநுவர, யடிநுவர பிரிவு அதிகாரியின் பகுதி, கங்கபலாத்த கோறளை (உடுநுவர), ஹெந்தெனிய கிராமத்தில், நியந்தகல தோட்டம் என, ஆரம்பப்பட இலக்கம் A 2673 ல் துண்டு 1 என அளந்து விபரிக்கப்பட்டுள்ள, 19 ஏக்கர், 1 றூ. 04 பே. விசாலமுள்ள ஒரு துண்டுக்காணி. இக்காணி, கோட்டே, தலவத்து கொடயிலிருக்கும் என். ஈ. வீரசூரிய, கியு. சீ. என்பவராலும், பேராதெனிய, மீவத்துரயிலிருக்கும் ஏ. எச். எம். புஞ்சி மஹாத்மயா என்பவராலும், பேராதெனிய, ஹெந்தெனியவிலிருக்கும் எஸ். எம். சரணேலிஸ் என்பவராலும், கம்பளை, கஹாட்டபிட்டிய, 374 ம் இலக்கத்திலிருக்கும் ஐ. எம். டி. அப்துல் ஹமீத் என்பவராலும் உரிமை கோரப்படுகிறது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஞூ மே மாதம் 4 ந திகதி 10 மணிக்கு கண்டி கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஞூ ஏப்றில் மாதம் 27 ந தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கு படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் எதும் சாதனங்களையும் கேட்கப்படும் நஷ்டஈட்டுத் தொகை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1960 ம் ஞூ மார்ச்சு மீ 23 ந வ.

ஈ. எம். டி. விக்ரமசிங்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

# நானுவித காணி அறிவித்தல்கள்

எல். எஸ். 4458.

### முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21(2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

உடதெல்தொட்ட ஸ்ரீ தர்மதான காந்தா சமித்திய சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான செல்வி கே. எம். கருணரத்ன, திருமதி ஆர். எம். முத்துமெனிக்கே, திருமதி டி. எல். ஏ. லெசாஹாமினே ஆகியவர்கள் கண்டி மாவட்டம் பெல்வுட் தோட்டத்தின் பீ. பீ. ஏ. 2439 படத்திலுள்ள 3 ம் காணித்துண்டிலுள்ள ¼ ஏக்கர் விசாலமுள்ள கட்டிடம் உட்பட்ட காணியை, அதில் ஓர் புடவை நிலையம் ஒன்று திறப்பதற்காக குத்தகைக்கு கேட்டு விண்ணப்பம் செய்திருக்கின்றார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. தேவைக்குக் குறிப்பிட்ட காணி கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இவ்விண்ணப்பத்தை மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(அ) காலம் : 5 வருடங்கள் ;
(ஆ) வாட்கை : வருடம் ஒன்றுக்கு ரூபா 13 ;
(இ) குத்தகை எடுப்பவர் குத்தகை கிடைத்து ஒரு வருடத்திற்குள் இந்நிலத்தில் கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திபடும்படி ஒரு புடவை நிலையம் நிறுவுதல் வேண்டும் ;
(ஈ) குத்தகையாளர் இந்நிலத்தை புடவை நிலையமாக உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் உயோகிக்கக் கூடாது.

3. குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு வாரத்துக்குள் செல்லுபடியான காரணங்கள் எனக்கு எழுத்துமூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

கொழும்பு,
1960 ம் ஞூ ஏப்றில் மீ 1 ந வ.

வி. இராமனுதன்,
காணி அதிபருக்காக.

---

எல். எஸ். 4558.

### முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21(2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாங்குளம் கிராம முன்னேற்றச் சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர்களும அவ்வூரைச் சேர்ந்தவர்களும் ஆகிய திருவாளர்கள்: நாகமுத்து இரத்தினம், முருகேசு மாரிமுத்து, கிரிபண்டா, சிமாம்பிள்ளை என்பவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாங்குளத்தில் முடிக்குரிய காணியில் இருந்து ஏறக்குறைய ½ ஏக்கர் நிலத்தை, அதில் ஒரு மண்டபம் நிறுவுதற் பொருட்டு குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளனர் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இந்நிலத்தின் எல்லைகள் பின் வருமாறு :—

வடக்கு : தனிப்பட்டவருடைய சொந்த நிலம் ;
தெற்கு : யாழ்ப்பாணம்-கண்டி ரோட்டு ;
கிழக்கு : பொதுவேலை அதிகாரியின் கீழ் வேலை செய்யும் கூலியாட்களின் வீடுகள்;
மேற்கு : மாங்குளம்-முல்லைத்தீவு ரோட்டு.

2. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. குறித்த விண்ணப்பத்தை, மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய, வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(அ) காலம் : 5 வருடம் ;
(ஆ) வாடகை : வருடம் ரூபா 5 ;
(இ) குத்தகையைப் பெறுபவர்கள், குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் வவுனியா அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக, அந்நிலத்தில் ஒரு மண்டபம் நிறுவுதல் வேண்டும் ;
(ஈ) குத்தகை எடுப்பவர்கள் அந்நிலத்தை ஒரு மண்டபம் ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது.

3. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

கொழும்பு,
1960 ம் ஞூ ஏப்றில் மீ 1 ந வ.

வி. இராமனுதன்,
காணி அதிகாரிக்காக.

---

எல். எஸ். 4554.

### முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21(2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கரப்பக்குத்தி கிராம முன்னேற்றச் சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவ்வூரைச் சேர்ந்தவர்களும் ஆகிய திருவாளர்கள்: கதிராமு பெரிய தம்பி, காசிப்பிள்ளை நல்லையா, பிள்ளையன் செல்லையா என்பவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கரப்புக்குத்தி கிராமத்தில் முடிக்குரிய காணியில் இருந்து ஏறக்குறைய ½ ஏக்கர் நிலத்தை, அதில் ஒரு மண்டபம் நிறுவுதற் பொருட்டு குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளனர் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. இந்த நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : அரசாங்க நிலம் ;
தெற்கு : அரசாங்க நிலம் ;
கிழக்கு : அரசாங்க நிலம் ;
மேற்கு : கிராமச்சங்க ஒழுங்கை.

2. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. குறித்த விண்ணப்பத்தை, மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய, வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(அ) காலம் : 5 வருடம் ;
(ஆ) வாடகை : வருடம் ரூபா 2/50 ;
(இ) குத்தகையைப் பெறுபவர்கள் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்குள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக, அந்நிலத்தில் ஒரு மண்டபம் நிறுவுதல் வேண்டும் ;
(ஈ) குத்தகை எடுப்பவர்கள் அந்நிலத்தை ஒரு மண்டபம் ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது.

3. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

கொழும்பு,
1960 ம் ஞூ ஏப்றில் மீ 1 ந வ.

வி. இராமனுதன்,
காணி அதிகாரிக்காக.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந திகதி புதன்கிழமையும், 15 ந திகதி வெள்ளிக்கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாகவிருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதத்தின் மூன்றும் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 8 ந திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 15 ந திகதி.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், **சனிக்கிழமைகளில்** மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், **சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும்** பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், **விளம்பரங்களுக்கும்** அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3·30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3·30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முற்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது